2019 ஜூலை 15]

104—

புதிய நியாய விலைக் கடை

***37671—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, அடைக்காகுழி ஊராட்சி, வண்டிக்காரவிளை பகுதியில் உள்ள ARS DA 032 நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான இன்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைகளை வெற்றிகரமாக சமர்ப்பிக்க இருக்கின்ற குடிமராமத்து நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நன்றியோடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, அடைக்காகுழி ஊராட்சி, வண்டிக்காரவிளை பகுதியில் செயல்பட்டு வந்த முழு நேர நியாய விலைக் கடை இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தற்போது குளப்புரம் முழு நேர நியாய விலைக் கடையாகவும், நல்லதங்காடு பகுதி நேர நியாய விலைக் கடையாகவும் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

[2019 ஜூலை 15

முற்பகல் 10—25

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் வீதியிலே வெள்ளையனை எதிர்த்து, வீர முழக்கமிட்ட சிவகாமி பெற்றெடுத்த சிப்பிக்குள் முத்து, கல்விக் கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய 117—வது பிறந்த தின விழாவில், 'அவர் வாழ்க, வாழ்க' என சொல்லிக்கொள்கிறேன்.*

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட அடைக்காகுழி ஊராட்சிப் பகுதியில் ARS DA *032 என்ற எண் கொண்ட நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையில் 1,287 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலிருந்து 4 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள காணிவிளை, கருவாக்குழி, நேத்தன்விளை, விராலிவிளை, மாங்கோடு, கல்வெட்டான்குழி, துண்டுவிளை, மேலூர்தோட்டம், கீழூர்தோட்டம், சூழக்கல்விளை, கல்லறைக்காடு, தலச்சான்விளை, ஒதியனூர்விளை, திருக்கோவில்விளை, பாகோடு, குளப்புரம் ஆகிய குக்கிராமப் பகுதிகளிலிருந்து தொலைதூரம் சென்று, ரேஷன் பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால், மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு, அங்கே இருக்கின்ற அரசுப் புறம்போக்கு நிலத்தில் நியாய விலைக் கடை கட்டடத்தைப் புதியதாக அமைத்து, அந்தப் பகுதிநேர நியாய விலைக் கடை சிறப்பாகச் செயல்பட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கடையை இரண்டாகப் பிரிக்கச் சொல்லி ஒரு வினாவை எழுப்பினார்கள். அதன் அடிப்படையிலேதான் அந்தக் கடை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் 1,279 குடும்ப அட்டைகள் இருப்பதனால், அதனைப் பிரித்து மேலும் ஒரு கடையை கீழூர்தோட்டம் என்கிற பகுதியில் அமைக்க வேண்டும் என்கிற கோரிக்கையை மறுபடியும் வைத்திருக்கிறார்கள். 1,279 குடும்ப அட்டைகள் இருப்பதனால் அந்தக் கடையைப் பிரித்துக் கொடுப்பதிலே பிரச்சினை ஏதும் இல்லை. ஆனால், ஒரு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு*

2019 ஜூலை 15]

உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டித் தருவதாகவும் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இதையெல்லாம் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மத்தியோடு ஊராட்சி, பரப்புவிளைப் பகுதியில் DP 036 என்ற நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடையில் 1,208 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இதனைச் சுற்றி 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்பலத்துவிளை, கோத்திரவிளை, மாத்திரவிளை, மேற்கு மாத்திரவிளை, காட்டுக்குளம் போன்ற கிராமப் பகுதிகள் எல்லாம் இதற்கு உட்பட்டதாகும். ஆகையினால், மத்தியோடு ஊராட்சி, பரப்புவிளையில் இருக்கின்ற நியாய விலைக் கடையைப் பிரித்து, மேற்கண்ட கிராமங்களை உள்ளடக்கி மேற்கு மாத்திரவிளைப் பகுதியில் அரசு புறம்போக்கு இடத்தில் புதியதாக ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை உருவாக்கித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு ஒரு கோடியே 99 இலட்சத்து 95 ஆயிரத்து 799 மின்னணு குடும்ப அட்டைகள்மூலம் 6 கோடியே 60 இலட்சத்து 61 ஆயிரத்து 57 பேர் பயன்பெறுகிறார்கள். இது இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பொது விநியோகத் திட்டத்தினுடைய செயல்பாடு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 2,209 புதிய நியாய விலைக் கடைகள் பிரிக்கப்பட்டு, தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரிக்கிறபொழுது, அந்த முழுநேர நியாய விலைக் கடையில் பணிபுரிகிற ஒருவர்தான் பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, ஒரு கடையைப் பிரிக்கின்ற நேர்வில், 6 நாட்கள் பணி நாட்கள் என்று சொன்னால், main கடையில் 4 நாட்களும், பிரித்த அந்தக் கடையில் 2 நாட்களும் என்று 6 நாட்கள் பணியாற்றுகிறார்கள். 2–வது கடையைப் பிரிக்கின்றபோது, குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையில் இன்னொரு நாள் அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், main கடையில் 3 நாட்கள் அல்லது இரண்டு நாட்கள்தான் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டு விடும். இதுதான் இதிலே இருக்கிற நடைமுறைச் சிக்கல். இருந்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பொது மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு, கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 2,209 புதிய நியாய விலைக் கடைகளை பகுதிநேரக் கடைகளாகவும், முழுநேரக் கடைகளாகவும் பிரித்துக் கொடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கு மாத்திரவிளை என்கிற பகுதியிலே புதிய பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதனை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாளரமாணிக்கம் ஊராட்சியிலே நியாய விலைக் கடை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே ஊராட்சியைச் சேர்ந்த சமுத்திராபட்டியிலே, புதிதாக நியாய விலைக் கடை கட்டி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தக் கடை அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்றுதான் கட்டப்பட்டது. ஆனால்,*

2019 ஜூலை 15]

இப்போது அங்கே உணவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. எனவே, கட்டடம் கட்டி தயாராக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் நியாய விலைக் கடையை முழுநேர நியாய விலைக் கடையாகவோ அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையாகவோ திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, பேரையூர் ஊராட்சியிலே, பிளாக்குடிபட்டிக்கு ஒரு நியாய விலைக் கடைக்கான ஒப்புதல் வந்திருந்தது. ஆனால், அங்கு இடமில்லாத காரணத்தினால் 15, 20 ஆண்டுகளுக்கு முன்பே கோட்டூர் ஊராட்சி, தாழம்பட்டியிலே அந்தக் கடை திறக்கப்பட்டிருக்கிறது. இப்போது பிளாக்குடிபட்டியிலேயே இடம் இருக்கிறது. ஆகவே, கோட்டூர் ஊராட்சி பாதிக்கப்படாதவாறும் இங்கே போதுமான குடும்ப அட்டைதாரர்கள் இருக்கிற காரணத்தாலும் பேரையூர் ஊராட்சி, பிளாக்குடிபட்டியிலே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்படுமா என்பதை தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வாளரமாணிக்கம் ஊராட்சி, சமுத்திராபட்டியில் ஒரு நியாய விலைக் கடை கட்டப்பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது என்பது குறித்து ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு நிச்சயமாக துறை காரணமாக இருக்க முடியாது. வாளரமாணிக்கத்திலேயே இருக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் சொல்லியிருப்பார்கள். அதனால் சமுத்திராபட்டியிலே திறப்பதிலே பிரச்சினை இருந்திருக்கும். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்னொரு கடை ஒன்றையும் சொல்லியிருக்கிறார்கள். ஆய்வின் அடிப்படையில் தேவைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*